# ௪ விடியும் வேளை

மன்னவனூர் ஓர் அழகான மலைக்கிராமம், இனிய காலை வேளை, மழைபெய்து ஓய்ந்திருந்தது, சாலையில் அங்கும் இங்குமாகத் தண்ணீர் தேங்கியிருந்தது. மரங்களின் கிளைகளிலும் இலைகளிலும் நீர்த்திவலைகள் தெரிந்தன. பஞ்சுப்பொதிகள் போன்ற மேகக்கூட்டங்கள், வளைந்து நெளிந்து மிதந்தபடிச் சென்றன. பச்சைப்பசேல் என்ற வயல்வெளிகளில், சிலுசிலுப்பான காற்று கூடவே எழுந்தது.

பனைஓலை வேய்ந்த குடிசையில், நெற்றியில் வட்டநிலா போலச் சிவப்பாக குங்குமப் பொட்டு வைத்த அம்மா அறிவுமதி, விறகு அடுப்பில் சமைத்துக் கொண்டு இருந்தாள். கருத்த மண்சட்டியில் வெள்ளை வெளேரென வரகரிசிச்சோறு கொதித்துக் கொண்டிருந்தது. கொடியடுப்பில் மஞ்சளாகப் பருப்பு,மணம்மிக்க பூண்டுடன் வெந்து கொண்டிருந்தது.

வதக்கிய பசுமையான பிரண்டைத் துவையலை அம்மியில் அரைத்துக் கொண்டே, அடுப்பையும் கவனித்துக் கொண்டிருந்தாள் அறிவுமதி.

மரங்களும் செடிகளும் சூழ்ந்த இடத்தில், பசுங்கன்றென ஓடியாடி விளையாடிக் கொண்டிருந்தனர் பிள்ளைகள் இனியனும், இனியாவும்.



அன்பு பொங்க, தன் பிள்ளைகளை அழைத்தாள் அம்மா. பள்ளிக்குச் செல்ல தங்களை ஆயத்தப்படுத்திக் கொண்டனர் பிள்ளைகள்.

பசுஞ்சாணம் மெழுகிய தரையில் மனைப்பலகையில் அமர்ந்து துளிரான தலைவாழை இலையை விரித்து, நீர் தெளித்து, அதில் சுடச்சுட வரகரிசிச் சோறிட்டு, ஆவிபறக்கும் பருப்புக் கடையலை ஊற்றினாள் அம்மா. துணையாகத் தொட்டுச்சுவைக்கச் சுள்ளென்ற பிரண்டைத் துவையலும் வைத்தாள்.

நாக்கு சப்புக்கொட்ட பிள்ளைகள் விரும்பி உண்டனர். பின்னர், தாயிடம் விடைபெற்றுப் பள்ளிக்குத் துள்ளிக்குதித்து ஓடினர்.

வாய்க்காலும் வரப்பும் நிறைந்த வயலில், வேலை செய்து கொண்டிருந்த கணவனுக்கு உணவளிக்க, கலயத்தில் சோறுடன் அம்பென விரைந்தாள் அறிவுமதி. இனிமையான காலைப்பொழுது இப்படியாகக் கழிந்தது.



எளிய வருணனைச் சொற்களைப் பயன்படுத்திச் சிறுசிறு உரைப்பகுதிகளைப் படித்தல், தமக்கான நடையில் எழுதுதல்

## வாங்க பேசலாம்

- மன்னவனூர் கிராம வருணனையை உன் சொந்த நடையில் கூறுக .
- உமது ஊரின் மாலை நேரக் காட்சிகளை வருணித்துக் கூறுக.
- பாடப்பகுதியை வாய்விட்டுச் சரியான உச்சரிப்புடன் படித்துக் காட்டுக.






படத்திலுள்ள எந்தக் கிராமத்தில் நீ வாழ விரும்புகிறாய்? ஏன்? உனது ஊரைச் சுத்தமாக்க என்ன செய்யலாம்? திட்டமிடுக.

1



2



## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

### சரியான பலூன்களை எடுத்துப் பொருத்துக.

01 வேளை

02 பொதி

03 ஆயத்தப்படுத்துதல்

04 துளிர்

05 கொடியடுப்பு




4VE03

## சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

01 சாலையெங்கும் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..........................................

அ) சாலை + யெங்கும் ஆ) சாலை + எங்கும்

இ) சால + எங்கும் ஈ) சால + யெங்கும்

02 சுண்டியிழுக்கும் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..........................................

அ) சுண்டி + யிழுக்கும் ஆ) சுண் + டியிழுக்கும்

இ) சுண்டு + இழுக்கும் ஈ) சுண்டி + இழுக்கும்

03 ஓடி + ஆடி என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ..........................................

அ) ஓடிஆடி ஆ) ஒடியோடி

இ) ஓடியாடி ஈ) ஒடியாடி

04 காலை + பொழுது என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ..................................

அ) காலைபொழுது ஆ) கால்பொழுது

இ) காலைப்பொழுது ஈ) காலப்பொழுது

05 வரகு + அரிசி என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ..........................................

அ) வரகரிசி ஆ) வரகுஅரிசி

இ) வரக்கரிசி ஈ) வரகுகரிசி

06 உணவு + அளிக்க என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ..................................

அ) உணவுஅளிக்க ஆ) உணவளிக்க

இ) உணவுவளிக்க ஈ) உணவ்வளிக்க

## வினாக்களுக்கு விடையளி

01 அழகிய மலைக்கிராமத்தின் பெயர் என்ன?

02 கிராமத்தில் உனக்குப் பிடித்த இயற்கைக் காட்சிகளை எழுதுக.

03 பிள்ளைகள் காலை உணவாக என்ன உண்டார்கள்?

## பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள வருணனைச் சொற்களை எடுத்து எழுதுக

எ.கா: பச்சைப்பசேல் என்ற வயல்வெளி ..........................................................

## உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

சிறு தானிய உணவுகளே நம் உடல்நலத்திற்கு ஏற்றவை. குதிரை வாலி அரிசி, தினை, வரகரசி, கேழ்வரகு, கம்பு, சோளம், பனிவரகு அரிசி, மாப்பிள்ளை சம்பா அரிசி போன்றவை சிறு தானியங்கள் ஆகும். இந்தச் சிறு தானியங்களைக் கொண்டு, பல உணவு வகைகளை மண் பானைகளில் சமைத்துப் பயன்படுத்துவது மிகவும் நல்லது. நாம் உண்ட உணவு முழுமையாகச் செரித்த பிறகுதான், அடுத்தவேளை உணவை நாம் உண்ண வேண்டும். இதைத்தான் நம் முன்னோர்கள், "பசித்துப் புசி" என்றனர். இவற்றைத் தவிர்த்துவிட்டுத் துரித உணவுகளை உண்ணத் தொடங்கியதே பல்வேறு நோய்கள் ஏற்படக் காரணமாகிறது.

சிறு தானிய உணவுகளை உண்போம்!

வளமான வாழ்வைப் பெறுவோம்!




01 எவ்வகை உணவு முறை நமக்கு ஏற்புடையது?

02 சிறு தானியங்களுள் எவையேனும் நான்கு எழுதுக.

03 துரித உணவு வகைகளை உண்ணக் கூடாது. ஏன்?

## கலையும் கைவண்ணமும்

### தேவையான பொருட்கள்:


வெள்ளை வரைபட அட்டை, சிறிதளவு மணல், பசை, கரிக்கோல், வண்ணப் பொடி.

### செய்யும் முறை



வெள்ளை வரைபட அட்டையில் உனக்குப் பிடித்த படத்தினை வரைந்து கொள். வரைந்த பகுதிக்குள் மட்டும் பசையினைத் தடவு. தடவிய பசை காய்வதற்குள் மணலைத் தூவு. நன்றாகக் காய்ந்த பின் அட்டையைக் கவிழ்த்துவிட்டு, பிறகு திருப்பினால் அழகிய மணல் ஓவியம் கிடைக்கும். தேவையான இடத்தில் வண்ணப் பொடிகளைத் தூவி மேலும் அழகுப்படுத்து. இதனை வாழ்த்து அட்டையாகவும் பயன்படுத்தலாம்.

### அறிந்து கொள்வோம்



- இரண்டு சொற்கள் ஒரே கருத்தினை வலுப்படுத்துவது நேரிணை.
  எ.கா:
  சீரும் சிறப்புமாக,
  ஓங்கி உயர்ந்த.
- இரண்டு எதிர்ச்சொற்கள் எதிரெதிர் கருத்தினை வலுப்படுத்துவது எதிரிணை.
  எ.கா:
  இரவு பகல்,
  மேடு பள்ளம்



### செயல் திட்டம்



- சிறுதானியங்கள், நவதானியங்கள் ஆகியவற்றைச் சேகரித்து, ஒட்டி அதன் பெயரை எழுதிப் படத்தொகுப்பு தயார் செய்க.